Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 106

திங்கட்கிழமை
11 மார்ச் 2024

மாசி 28 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"ஆசை இருக்கலாம்
ஆனால் உப்பிடி
100 லட்சத்துக்கு
பேராசைப்படுகிறது
அநியாயம் கண்டியளோ"

## வெடுக்குநாறிமலையில் அட்டூழியம்

# நீதிகேட்டு நல்லூரில் இன்று கவனவீர்ப்பு!

## வழிபாட்டுரிமையைக் காப்பாற்ற அணிதிரளுமாறு மக்களுக்கு அழைப்பு

**யாழ்ப்பாணம், மார்ச் 11**

**வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரி வழிபாடுகளை முன்னெடுத்தவர்களை குண்டுக்கட்டாகத் தூக்கிவீசி, கைதுசெய்து, வழிபாட்டை காட்டுமிராண்டித்தன மாகக் குழப்பிய பொலிஸாரின் படுபாதகச் செயலைக் கண்டித்தும், வழிபாட்டு உரிமையை நிலை நாட்டும் வகையிலும் நல்லூர் ஆதீன முன்றிலில் இன்று கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.**

11

## பொலிஸாரின் மோசமான செயலைக் கண்டிக்கிறோம்

### இந்து மன்றம் அறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 11
வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் கோவில் மகாசிவராத்திரி நாளில் பொலிஸார் மேற்கொண்ட அராஜகங்களை கண்டிப்பதாக யாழ். பல்கலைக் கழக இந்து மன்றம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-
இலங்கையில் சமய நல்லிணக்கம் வலி

10

விரிவுகள்:- பக்கம் - 11 இல்

### வெடுக்குநாறிமலையில் கைதானோரை

## மருத்துவமனையில் சேர்ப்பதை தாமதப்படுத்திய அதிகாரிகள்

### மாற்றுடை வழங்கப்படாத அவலம்

## அரசமைப்பை மாற்றினாலேயே இன, மதவாதத்தை முறியடிக்கலாம்

### மாற்றத்துக்காகக் குரலெழுப்புமாறு கோருகிறது பல்கலை. ஆசிரியர் சங்கம்

## உரிமைகள் மறுக்கப்படும்போது ஊமைகளாக இருக்கமுடியாது

### வெடுக்குநாறிமலை அராஜகத்துக்கு எதிராக மட்டக்களப்பில் கண்டனப் போராட்டம்!



## சஜித் மீதான தாக்குதலுடன் ரணிலின் பரப்புரை ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 11
ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பரப்புரைக்கான கூட்டத்தை நேற்று ஆரம்பித்துவைத்த அந்தக்கட்சியின் தலைவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி மீது விமர்சனங்

10

## 15 வயதுச்சிறுவன் கசிப்புடன் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 11
சரசாலையில் 4 லீற்றர் 500 மில்லிலீற்றர் கசிப்புடன் 15 வயதுச் சிறுவன் ஒருவனை சந்தேகத்தில் கைது செய்துள்ளதாக சாவகச்சேரி பொலிஸார்

10

## நிமோனியாவால் இளைஞர் சாவு!



யாழ்ப்பாணம், மார்ச் 11
வடமராட்சி, கரவெட்டியில் வீட்டில் மயங்கிச் சரிந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இவரின் சாவுக்கு நிமோனியாத் தொற்றே காரணம் என உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது.
பாடசாலை

10



## 100 லட்சம் வாக்குகள் ரணிலுக்கு கிடைக்கும்!

### வஜிர அபேவர்த்தனவின் ஆசை இது

கொழும்பு, மார்ச் 11
இலங்கை வரலாற்றில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வி அடைந்தபோதெல்லாம் இந்நாடும் வீழ்ச்சி கண்டுள்ளது என்பதே உண்மை. ரணில் விக்கிரமசிங்க 100 இலட்சம் வாக்குகளை இம்முறை

10

### இந்திய மீனவர் அத்துமீறல்:

## வடக்கு மீனவர்கள் அமைதி காக்கவும்!

### கோருகிறார் டக்ளஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 11
அத்துமீறும் இந்திய மீனவர்களைக் கடற்படையினர் கைது செய்வார்கள். எனவே இங்குள்ள கடற்றொழில்

11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கராயன் மருத்துவமனை தரத்தை உயர்த்தவேண்டும்



**கிளிநொச்சி, மார்ச் 11**

**கிளிநொச்சி, அக்கராயன் பிரதேச மருத்துவமனையை ஆதார மருத்துவமனையாகத் தரமுயர்த்தவேண்டும் என்று அந்தப் பகுதி பொதுஅமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.**

இதுதொடர்பில் பொதுஅமைப்புகள் மேலும் தெரிவித்ததாவது:-

அக்கராயன் மருத்துவமனையுடன் ஒரே தரத்தில் இருந்த மல்லாவி, முழங்காவில், மாங்குளம் ஆகிய மருத்துவமனைகள் ஆதார மருத்துவமனைகளாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளன. எனினும், அக்கராயன் மருத்துவமனை இன்னமும் தரமுயர்த்தப்படவில்லை.

அக்கராயன்பிரதேசமருத்துவமனையை நம்பி வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான், ஸ்கந்தபுரம், முக்கொம்பன், கண்ணகைபுரம், கோணாவில், யூனியங்குளம், முல்லைத்தீவின் அமைதிபுரம், ஆரோக்கியபுரம், அம்பலப்பெருமாள் குளம், கோட்டைக்கட்டியகுளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன.

மருத்துவமனை தரமுயர்த்தப்படாததன் காரணமாக நோயாளர்கள் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கே அனுப்பப்படுகின்றனர். மருத்துவமனையைத் தரமுயர்த்துவதற்குரிய அத்தனை வாய்ப்புகளும் உள்ள நிலையில், விரைவில் மருத்துவமனையைத் தரமுயர்த்தி, மேம்பட்ட சுகாதார வாய்ப்புகளை மக்கள் அனுபவிப்பதற்குச் சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தப்படவேண்டும் - என்றுள்ளன. (ம-13)

## முதலையால் கடியுண்டு பெண் படுகாயம்

கிளிநொச்சி, மார்ச் 11

புதுக்குடியிருப்பு- மன்னாங்கண்டல், வசந்தபுரம் பேராற்றுக்கு குடிதண்ணீருக்காக ஆடுகளைக் கொண்டு சென்ற பெண் ஒருவர் முதலையால் கடியுண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த 7ஆம் திகதி நடந்துள்ளது. சம்பவத்தில் படுகாயமடைந்த பெண் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சாமிநாதன் விசாலாட்சி (வயது-47) என்ற பெண்ணே படுகாயமடைந்துள்ளார். பெண்ணின் வலது கையை முதலை கடித்துள்ளது.

அதில் படுகாயமடைந்த பெண் முல்லைத்தீவு பொது மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (எ-13)

## விமானப்படை கண்காட்சியில் கஞ்சாவுடன் சிக்கிய பெண்

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ்ப்பாணம், முற்றவெளியில் நடைபெற்றுவரும் விமானப் படைக் கண்காட்சிக்கு கேரளாக் கஞ்சாவுடன் சென்றார் என்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நயினாதீவைச் சேர்ந்த 26 வயதான பெண் ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும், அவரிடம் இருந்து 2 கிலோ கேரளாக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கண்காட்சியின் பிரதானநுழைவாயிலில் சோதனைக்குட்படுத்தப்பட்ட போதே பெண்ணிடம் இருந்து கஞ்சா மீட்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

விமானப்படையினரால் கைதுசெய்யப்பட்ட பெண் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-20)



அத்துமீறிய மீன்பிடி:

## இந்திய மீனவர் 22 பேர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 11

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 22 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மூன்று படகுகளும் கைப்பற்றப்பட்டன.

யாழ்ப்பாணம் - காரைநகர் கடற்பரப்பில் கடற்படையினர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றப் பொறிமுறைக்கு உட்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-100,26)

## பனங்காமம் குளத்தில் 57 ஏக்கரில் சிறுபோகம்

முல்லைத்தீவு, மார்ச் 11

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கின் பனங்காமம் குளத்தின் கீழ் இம்முறை 57 ஏக்கர் பரப்பளவில் சிறுபோகச் செய்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாந்தைகிழக்கின் பனங்காமம் குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கைக்கான பொதுக்கூட்டம் பனங்காமம் பொதுநோக்கு மண்டபத்தில் கடந்த 7ஆம் திகதி நடைபெற்றது. இதன்போதே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம-13)



## கையிருப்பு அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 11

கடந்த ஜனவரி மாத இறுதிக்குள் நாட்டின் மொத்த கையிருப்பு 4 ஆயிரத்து 500 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கையிருப்புச் சொத்துகளில் சீனாவின் மக்கள் வங்கியின் 1.4 பில்லியன் டொலர் அந்நியச் செலாவணி வசதியும் அடங்கும்.

இலங்கை மத்திய வங்கி இந்த ஆண்டு ஜனவரியில் நிகர அடிப்படையில் சுமார் 245 மில்லியன் அமெரிக்க டொலரை ஈட்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## ரணில் எப்படி ஜனாதிபதியானார்? விரைவில் நூல்



கொழும்பு, மார்ச் 11

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2022ஆம் ஆண்டு நடைபெற்ற 'அரகலய' எதிர்ப்புக்குப் பின்னர் எப்படி இலங்கையின் ஜனாதிபதியானார்? என்பது தொடர்பான நூல் ஒன்று விரைவில் வெளியிடப்படவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன இந்தத் தகவலை தெரிவித்தார்.

இந்த நூல் கோத்தாபய ராஜபக்சவின் "என்னை வெளியேற்றுவதற்கான சதி" நூலின் தொடர்ச்சியாக அமையும் என்றும் ஏற்கனவே இந்த நூல் எழுதப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## நெல் கொள்வனவை ஆரம்பிக்கவுள்ள அரசு

கொழும்பு, மார்ச் 11

நாட்டில் நெல் கொள்வனவை இன்று முதல் ஆரம்பிக்கவுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். அதற்கமைய, அம்பாந்தோட்டையிலிருந்து நெல் கொள்வனவு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கு அரசாங்கத்திடமிருந்து இதுவரை உதவிகள் கிடைக்கப்பெறவில்லை. ஆயினும் அமைச்சின் நிதியினூடாக நெல் கொள்வனவு நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)



## ஜா – எலவில் துப்பாக்கிச்சூடு

கொழும்பு, மார்ச் 11

ஜா - எல, தடுகம பஸ்வத்தை பகுதியில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் காயமடைந்தவர் சிகிச்சைகளுக்காக ராகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று ஜா - எல பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துமீறிய மீன்பிடி

# கடந்த 10 ஆண்டுகளில் 2,354 இந்தியமீனவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 11

**அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டதால் கடந்த 10 ஆண்டுகளில் 435 படகுகளுடன் 2 ஆயிரத்து 354 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். வாரத்தில் ஏழுநாள்களும் எல்லைதாண்டும் தமிழக மீனவர்களால் யாழ். மீனவர்கள் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர் என்று கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஜெ.சுதாகர் தெரிவித்துள்ளார்.**

தமிழக மீனவர்களது எல்லை தாண்டி மீன்பிடி நடவடிக்கையால் யாழ்ப்பாணம் மாவட்ட மீனவர்கள் எதிர்கொள்ளும் பாதிப்புத் தொடர்பில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- யாழ். மாவட்டத்தில் உள்ள கடற்றொழிலாளர்கள் பெரும்பாலும் கரையோர மீன்பிடியை நம்பியே வாழ்கின்றார்கள். முன்னைய காலங்களில் தீவுப்பகுதி கடற்பரப்பில் வாரத்தில் திங்கள், புதன், சனி ஆகிய மூன்றுநாள்களில் மட்டுமே இந்தியப் படகுகள் அத்துமீறுவதை அவதானிக்கமுடியும். ஆனால், தற்போது வாரத்தின் ஏழுநாள்களும் இந்திய மீனவர்கள் அத்துமீறுகின்றனர். இதனால் யாழ்ப்பாண மீனவர்களின் வாழ்வாதாரம் பெரும் பாதிப்புக்குள் சென்றுகொண்டிருக்கின்றது -என்றார்.

(ம-100)

## பஸ் பாஸ் தொடரும்

கொழும்பு, மார்ச் 11

நாடாளுமன்ற ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட இலவச பஸ் பாஸ் நடைமுறையை இரத்துச் செய்யும் திறைசேரியின் தீர்மானத்தை அமைச்சரவை நிராகரித்துள்ளது.

நாட்டின் பொருளாதார நிலையைக் கருத்திற்கொண்டு இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து இந்த நடைமுறையை இரத்துச் செய்ய திறைசேரி முடிவு செய்தது. ஆயினும் இந்த நடைமுறையைத் தொடர்வதற்கு அமைச்சரவை தீர்மானம் எடுத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## வறட்சியான காலநிலையால் தண்ணீர் வழங்கலில் சிக்கல்

கொழும்பு, மார்ச் 11

நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக நீர் விநியோகத்தில் தடைகள் ஏற்பட்டுள்ளன என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை தெரிவித்துள்ளது. தினசரி தண்ணீர்த் தேவை அதிகரித்து வருவதே இதற்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில பிரதேசங்களுக்குக் குறைந்த அழுத்தத்தின்கீழ் நீர் வழங்குவதற்கு அல்லது மட்டுப்படுத்தப்பட வேண்டியுள்ளது. இது தொடர்பாக முறைப்பாடுகளைத் தெரிவிக்க 1939 என்ற தொலைபேசி இலக்கமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.


(எ-இ)

## போதை விருந்து 27 பேர் கைது

தியத்தலாவ பிரதேசத்தில் பல்கலைக்கழக மாணவி ஒருவரின் பிறந்தநாள் விழாவுக்கு பேஸ்புக் ஊடாக அழைக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவிகள் ஐவர் உட்பட 27 பேர் கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருளை நுகர்ந்து கொண்டிருந்த நிலையிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்களிடமிருந்து 20 மில்லிகிராம் ஹஷிஸ் போதைப்பொருள், கையடக்கத் தொலைபேசிகள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

(ச-இ)



தம்மிக்க பெரேராவின் தகவல் தொழில்நுட்பக் கல்லூரியுடன் இணைந்து நெல்லியடியில் இயங்கும் தகவல் தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தை யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரக அதிகாரிகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சென்று பார்வையிட்டனர்.

(ப-27)

பொருளாதார நெருக்கடியால்

## அணையாடைப் பாவனையை நிறுத்தியுள்ள 40 வீதப் பெண்கள்

பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் சுமார் 40 வீதமான பெண்கள் சுகாதார அணையாடைப்பாவனையை நிறுத்தியுள்ளனர் என்று "எட்வகார்ட்டா" என்ற அமைப்பு நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

15 வயதுக்கும் 47 வயதுக்கும் இடைப்பட்ட பெண்களில் சுமார் 40 வீதமானவர்கள் சுகாதார அணையாடைப் பாவனையை நிறுத்தியுள்ளனர் என்று அந்த அமைப்பின் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டுநடத்தப்பட்ட குடும்ப வருமானம் தொடர்பான அறிக்கையில் காட்டப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது. (எ-இ)

## புதினம் தெரியுமோ?

யாழ்ப்பாணத்தில நாலைஞ்சு நாளா எங்கட சனங்கள் பிளேன் பார்க்க கூட்டம் கூட்டமாப் போனதுகள். ஹரிகரன்ர நிகழ்ச்சிக்கு எப்பிடி அள்ளுண்டு போச்சுதுகளோ அதைமாதிரி ஆமிக்காரர் வைச்ச இந்த பிளேன் கண்காட்சிக்கும் சனம் அள்ளுப்பட்டுக்கொண்டு தான் போனதுகள். உந்த அனலடிக்கிற வெயிலுக்குள்ளையும் அங்க போய், பிளேன் எல்லாம் பார்த்து, செல்பியளும் எடுத்து ஒரே கொண்டாட்டம் தான். ஆனால் உங்க போன சனங்களை வெடுக்குநாறிமலையில நடந்த அக்கிரமத்துக்கு நீதி கேட்டு இண்டைக்கு நடக்கிற போராட்டத்துக்கு வரச்சொன்னால் , ஒருத்தரும் எட்டியும் பாக்காயினம். எங்கட சனத்தின்ர மனநிலை மாறிக் கொண்டே வருகுது. அதுக்கேத்தபடி எங்கட உரிமைக்கான போராட்டங்களையும், அதின்ர வடிவங்களையும், போக்குகளையும் மாத்தாட்டி எதிர்காலத்தில எல்லாம் கஷ்டமாப் போகும்.

இப்ப பட்சி சொல்லவந்த விசயம் அதில்லை. வேற ஒண்டிருக்கு. உந்தப் பிளேன் கண்காட்சி நடந்த முத்தவெளிக்கு முன்னால உள்ள முச்சந்தியில ஒரு வள்ளுவர் சிலை இருக்கெல்லோ. தமிழில மட்டுமில்லாமல் உலகத்தில பெரும்பாலும் எல்லா மொழியளிலையும் இண்டைக்கும் வாசிக்கப்படுற திருக்குறளை எழுதின தமிழ்ப் புலவர் வள்ளுவர் எண்டது எல்லாருக்கும் தெரியும். அப்பிடி உலகத்தில உள்ள எல்லாரையுமே மலைக்க வைச்ச ஒரு இலக்கியத்தை தமிழில எழுதினதுக்காக, அவருக்கு மரியாதை செய்யிறதுக்காக, அவரைப் பற்றி எங்கட அடுத்த தலைமுறையும் தெரிஞ்சு கொள்ளோணும் எண்டதுக்காக யாழ்ப்பாணத்தில வள்ளுவருக்கு உந்த முச்சந்தியில சிலை வைச்சவை. இப்ப கண்காட்சி வைச்ச இலங்கை விமானப்படைக்காரர் தங்கட 73 ஆவது ஆண்டுக் கொண்டாட்ட சின்னத்தை அந்த வள்ளுவர் சிலையை மறைச்சுக் கட்டித் தான் கண்காட்சி வைச்சவை. இப்பிடி வள்ளுவர் சிலையை மறைச்சு, விமானப்படையின்ர சின்னத்தை வைக்க மாநகரசபை எப்பிடி அனுமதி குடுத்தது? எண்டு அதைப் பார்த்த எல்லாரும் கேக்கினம். ஒருவேளை மாநகரசபைக்குத் தெரியாமல் தான், விமானப்படைக்காரர் இப்பிடி அதை மறைச்சவை எண்டால் நாலைஞ்சு நாளா ஒண்டுமே செய்யாமல் ஏன் கையைக் கட்டிக் கொண்டு இருந்தவை? இப்பிடி வள்ளுவர் சிலையை வேற ஆரும் மறைச்சு ஏதும் சின்னத்தையோ, பனரையோ கட்டியிருந்தால் மாநகரசபைக்காரர் பாய்ஞ்சடிச்சுக் கொண்டு வந்திருப்பினம். எல்லா பனரையும், கட்-அவுட்டுகளையும் உடைச்செறிஞ்சு போட்டுத்தான் அடுத்தவேலை பார்த்திருப்பினம். கொஞ்சநாளைக்கு முதல் பரமேஸ்வரா றோட்டுக்கரையில தாங்களுண்டு, தங்கட யாவாரம் உண்டு எண்டு இருந்த நடமாடும் அப்பக்கடையையும், காளான் கடையையும் போக்குவரத்துக்கு இடையூறு எண்டு நல்லூர்ப் பிரதேசசபைக்காரர் அதுகளை அகற்றினவை. இப்பிடி எங்கட சனங்கள் ஏதோ தங்கட வருமானத்துக்காக ஓரமா ஏதும் செய்தாக் கூட உள்ளூராட்சிக்காரருக்கு கண்ணுக்க குத்தும். ஆனால் ஆமியோ, நேவியோ, பொலிஸோ, விமானப்படையோ நடுறோட்டில வந்து இப்பிடி எல்லாரும் மதிக்கிற வள்ளுவரின்ர சிலையைக் கேட்டுக் கேள்வியில்லாமல் மறைச்சு, கட்-அவுட் கட்டினால் கண்ணைப் பொத்திகொண்டு இருப்பினம்.

இதைமாதிரி கொழும்பில ஆரும் சிங்களக் கவிஞர்மார், அரசர்மாரின்ர சிலை இருந்தால் அதுகளை மறைச்சுக் கட்டிப்போட்டு விமானப்படை இப்பிடி தங்கட கட்-அவுட்டை வைக்க ஏலுமோ? பிக்குமாரெல்லாம் பிரண்டடிச்சு வந்து பிடுங்கியெறிஞ்சிருப்பினமெல்லோ. நாங்கள் இளிச்சவாயள் எண்டதால, என்னவும் செய்வினம். எல்லாத்தையும் நாங்கள் பார்த்துக் கொண்டு இருக்கோணும். எல்லாம் எங்கட தலைவிதி.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுக் குற்றங்களிலிருந்து பாடம் கற்காத கோத்தா அறிவிலி

## கடுமையாகச் சாடும் மனோ கணேசன்



**கொழும்பு, மார்ச் 11**

**சிங்கள - பௌத்தர் பலமடைவது சிறுபான்மையினருக்குத் தீங்கு விளைவிக்கும் என்பதாலேயே தனக்கு எதிரான உள்நாட்டு வெளிநாட்டுச் சக்திகள் ஒன்று திரண்டு அரகலயவை நடத்தினார்கள் என்று தன் நூலில் கூறும் கோத்தாபய ராஜபக்ச, வரலாற்றுக் குற்றங்களில் இருந்து இன்னமும்கூட பாடம் படிக்காத ஒரு அறிவிலி.**

-இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரகலயவில் பங்குபெற்ற மக்களில் நூற்றுக்கு தொண்ணூற்று ஒன்பது சதவிகிதத்தினர், 2019, 2020 தேர்தல்களில் மொட்டுச் சின்னத்துக்கு வாக்கு அளித்தவர்கள். அவர்கள்தான் கோத்தாபயவின் முட்டாள்தனமான, பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக வயிற்றில் பெரும் அடி விழுந்ததுடன் தெருவுக்கு வந்து போராடியவர்கள்.

தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும்கூட இவை பிரச்சினைகள் தான். ஆனால், அவற்றையும் மீறிய இன, மத ஒடுக்குமுறைகளால் அவர்கள் துன்பம் அடைந்தார்கள். ஆங்காங்கே ஒருசில தமிழ், முஸ்லிம் மக்கள் இறுதிக் கால கட்டங்களில் அரகலயவில் கலந்துகொண்டார்கள். சிங்கள -பௌத்தர் பலமடைவது சிறுபான்மையினருக்குப் பிடிக்காததாலேயே, அவர்கள் அரகலயவை நடத்தினார்கள் என்ற மாதிரி கூறி, உண்மையைத் திரிபுபடுத்த வேண்டாம் என முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு கடுமையாகக் கூறிவைக்க விரும்புகிறேன் - என்றுள்ளது. (எ-இ)

# பதவியேற்கும் அழைப்பை துணிந்து ஏற்றவர் ரணில்!

## கோத்தாபய தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 11

பிரதமர் பதவியை பொறுப்பேற்குமாறு தன்னால் விடுக்கப்பட்ட அழைப்பை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே அச்சமின்றி ஏற்றுக்கொண்டார் என்று முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் எழுதியுள்ள 'ஜனாதிபதி பதவியிலிருந்து என்னை வெளியேற்றுவதற்கான சதி' என்ற நூலிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை பிரதமர் பதவியை ஏற்குமாறு கோரினேன். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாமல் நாட்டை ஆட்சி செய்யமுடியாது எனக் கூறி அவர் எனது கோரிக்கையை நிராகரித்தார்.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டபோது, தன்னால் உடனடியாகப் பதவியை ஏற்க முடியாது என்று அவர் குறிப்பிட்டார் எனவும் கோத்தாபய தனது நூலில் தெரிவித்துள்ளார். (எ-இ)

# அரகலய போராட்டத்தில் சிங்களவர்களே பங்காளிகள்

## ரஜீவ்காந்த் சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 11

'அரகலய' போராட்டத்தில் வடக்கு- கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மக்களில் பெரும்பாலானோர் பங்கேற்கவில்லை. சிங்களவர்களே அந்தப் போராட்டத்தின் முக்கியமான பங்காளிகளாக இருந்தனர் என்று மக்கள் பேரவையின் செயற்பாட்டாளரான ராஜ்குமார் ரஜீவ்காந்த் தெரிவித்துள்ளார்.

ராஜபக்ச குடும்பம் மீண்டும் ஆட்சிபீடம் ஏறுவதற்கும், தமது இயலாமைகளை நியாயப்படுத்திக்கொள்வதற்கும் மேற்கொள்ளும் ஒரு முயற்சியே இது என்றும் அவர் குறிப்பிட்டார். (எ-இ)





# தமிழரசுக்கட்சியின் மகளிர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 11

இலங்கை தமிழரசுக் கட்சியின் மகளிர் முன்னணியின் ஏற்பாட்டில் மகளிர் தின நிகழ்வு 'ஈழப் பெண்களும் இனியொரு பலமும்' எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சி புனித திரேசாள் மேய்ப்பணி மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி கிளையின் மாதர் முன்னணியின் தலைவி முறாளினி தினேஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி நீதி மன்ற விஜயராணி சதீஸ்குமார் கலந்து கொண்டார். நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சரவணபவன், சாந்தி சிறீஸ்கந்தராஜா, சசிகலா ரவிராஜ், கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது விடுதலைப்புலிகளின் முதலாவது பெண் மாவீரர் 2ஆம் லெப் மாலதியின் திருவுருவப்படத்துக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது. (ச)



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்து விடுவீர்கள். உறவினர்களால் மகிழ்ச்சி ஏற்படும்.

**இடபம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மிதுனம்:** சகோதரர்களின் ஆதரவு உற்சாகம் தரும். தந்தைவழியில் திடீர்ச் செலவுகள் ஏற்படக் கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். சுபச்செய்தி கிடைக்க வாய்ப்பு உண்டு. பணிகளை குடும்பத்தினர் பகிர்ந்துகொள்வார்கள்.

**கடகம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்படும். வார்த்தைகளில் நிதானம் தேவை.

**சிம்மம்:** காரியம் இழுபறியாக முடியும். வாகனத்தில் செல்லும்போது கவனமாகச் செல்லவும். சிலருக்குக் குல தெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும். வியாபாரத்தில் சக வியாபாரிகளின் போட்டிகளைச் சமாளிக்க வேண்டிவரும்.

**கன்னி:** மனதில் அவ்வப்போது சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். சுபச்செய்தி ஒன்று கிடைக்க வாய்ப்பு உண்டு.

**துலாம்:** பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் உண்டாகும். செலவு செய்யவேண்டி வரும். உறவினர்களால் சங்கடங்கள் உண்டாகும். நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள். மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**விருச்சிகம் :** பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். தாய்வழி உறவுகளுக்காகச் செலவு செய்ய வேண்டி வரும். அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்படும்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. நண்பர்கள் தொடர்புகொண்டு பேசுவார்கள். இலாபம் கூடுதலாகக் கிடைக்கும்.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. ஆதாயமும் ஏற்பட வாய்ப்பு உள்ளது. வீண் அலைச்சலும், செலவுகளும் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்துச் செயற்படுவீர்கள். சகோதரர்களுக்காகச் செலவு செய்யவேண்டி வரும். உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படக்கூடும். வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும்.

**மீனம்:** மனதில் தைரியமும் உற்சாகமும் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். மகிழ்ச்சி உண்டாகும். ஆதாயம் உண்டாகும். சுபச்செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சஜித் எவருக்கானவர்...?

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய சிவராத்திரி வழிபாடுகளுக்கு எதிராக உச்சபட்சத் தாண்டவம் நிகழ்த்தப்பட்டு, இரண்டு நாள்கள் முழுதாகக் கடந்திருக்கின்றன. ஆனால், இதுவரை இந்த இழிசெயல்களுக்கு எதிராக'ஓர் எதிர்க்கட்சித் தலைவர்' என்ற ரீதியில் சஜித் வாய்திறக்கவில்லை. எந்தவொரு கண்டனக் குரலையும் சஜித் பதிவுசெய்ய வில்லை. சிறுபான்மை மக்களை அரவணைத்து நாட்டை அபிவிருத்தியிலும், இன ஐக்கியத்திலும் வழிநடத்தக்கூடிய தலைவராகத் தன்னைக் காட்டிக்கொள்ளும் சஜித்தின் விம்பம் 'வெடுக்குநாறி மலையிலிருந்து' கீழே பொத்தென்று விழுந்திருக்கின்றது.

தையிட்டி திஸ்ஸ விகாரையாக இருக்கட்டும், கந்தரோடையில் அமைக்கப்படத் திட்டமிட்ட விகாரையாக இருக்கட்டும், குருந்தூர்மலை ஆதி ஐயனார் ஆலயமாக இருக்கட்டும், முல்லைத்தீவு வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரராக இருக்கட்டும் இவற்றைவிட கிழக்கிலுள்ள இந்துமக்களின் வழிபாட்டுத்தலங்களாக இருக்கட்டும் அத்தனையும் 2009ஆம் ஆண்டு புலிகளின் ஆயுதங்கள் மௌனித்த பின்னர் சிங்களப் பேரினவாத பூதத்தால் திட்டமிட்டுத் தினம்தினம் இரையாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தமிழர் தாயகத்தில் இயல்பாகவே முன்னெடுக்கப்பட்டுவந்த 'சிங்கள -பௌத்த பேரினவாதத் திணிப்பு' கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றிருந்த காலத்தில் பலமடங்கு வேகம் பெற்றிருந்தது. அது இப்போதும் தன் முழுப்பலத்துடன் தமிழர்களின் தொன்மங்களை, பண்பாடுகளை, கலைகளை, கலாசாரங்களை, நிலங்களை, விழுமியங்களை மற்றும் இன்னோரன்ன அம்சங்களை இரையாக்கிக் கொண்டிருக்கின்றது. இத்தனைக்கும் 'பொறுப்புள்ள' எதிர்க்கட்சித் தலைவராக - சிறுபான்மை மக்களுக்கான தலைவராக - தமிழர்களின் அபிலாஷைகளையும் அங்கீகரிப்பவராக - மதசமத்துவத்தை மதிக்கின்றவராக -சஜித் ஆற்றிய துலங்கல் என்ன? வலிதான கண்டன அறிக்கையைக்கூட அவரால் பதிவுசெய்ய முடிந்ததா? பௌத்த பேரினவாத ஆக்கிரமிப்புக்கு எதிராக தன் இயலுமைக்கு ஏற்ற செயற்பாட்டு அரசியலை சஜித் மேற்கொண்டாரா? இந்தக் கேள்விகளுக்கான பதில்கள் தேடப்படும் பட்சத்தில் சஜித்தின் அரசியல் அப்பட்டமாகும்.

நீதி நிலைநாட்டப்படுவதற்கு எதிராகக் காக்கப்படும் கள்ளமௌனம்கூட அநீதியே என்பார்கள். அவ்வாறானதொரு 'இழிநிலை' அரசியல்தான் சஜித்தினுடையது. சஜித் பிரேமதாஸ ஒரு வலுவான எதிர்க்கட்சித் தலைவராக, இந்த பௌத்த ஆக்கிரமிப்புக்கு எதிராக எத்தனையோ நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். போராட்டங்கள் இடம்பெறும் பகுதிகளுக்கு நேரில்சென்று அங்கு போராடும் தமிழர்களுடன் பேசலாம், 'சிங்கள-பௌத்தம்' என்றால் என்ன? 'சிங்கள -பௌத்த பேரினவாதம்' என்றால் என்ன? என்பது தொடர்பான தெளிவூட்டல்களை அவர் தெற்கில் மேற்கொள்ளலாம், வலுவான போராட்டங்களையும் விழிப்புணர்வுகளையும் கொழும்பில் முன்னெடுக்கலாம், நாடாளுமன்றில் பெரமுனவின் மத ஆக்கிரமிப்புக்கு எதிராகக் குரல் கொடுக்கலாம். ஆனால், இவற்றில் எதையும் சஜித் இதுவரை செய்யவில்லை, இனியும் செய்யப் போவதுமில்லை. காரணம் இந்த ஆட்சியாளர்கள் கட்சிக் கொடிகளின்கீழ் பிளவுபட்டுள்ளனரே அன்றி சிங்கள -பௌத்த. பேரினவாதம்' என்பதன்கீழ் இரண்டறக் கலந்தேதான் இருக்கின்றனர் அவ்வளவே...!



# அமைச்சர்களின் அதிகாரத்தை வரையறுப்பதற்கு புதிய சட்டம்

**கொழும்பு, மார்ச் 11**

**அரச நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகளுக்கு நபர்களை நியமிக்கும் போதும், அந்த நிறுவனங்களில் உள்ள அரசுக்குச் சொந்தமான பங்குகளை தனியாருக்கு வழங்கும்போதும் துறைக்குப் பொறுப்பான அமைச்சருக்கு நெருக்கமானவர்கள் மற்றும் உறவினர்களுக்கு அவற்றை வழங்குவதைத் தடுக்கும் சட்டவரைவு விரைவில் அமைச்சரவையில் தாக்கல் செய்யப் படவுள்ளது.**

அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களை மறுசீரமைப்பது மற்றும் அவற்றை நடத்திச் செல்வது தொடர்பான ஏற்பாடுகள் அடங்கிய சட்ட வரைவு அமைச்சரவையின் அனுமதிக்காகத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

அரச நிறுவனங்கள் தொடர்பில் துறைக்குப் பொறுப்பான அமைச்சர்கள் சட்டத்துக்குப் புறம்பாகச் செயற்படும் சந்தர்ப்பத்தைத் தடுப்பது இதன் அடிப்படை நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்ட வரைவு நிறைவேற்றப்பட்ட பின்னர், துறைக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்குத் தேவையான விதத்தில் அமைச்சரவைப் பத்திரங்களை தாக்கல் செய்து, அரச நிறுவனங்களுக்கு வாகனங்களைக் கொள்வனவு செய்வதும் தடுக்கப்படும் என்று கூறப்படுகின்றது. (எ-இ)



# 18 மாவட்டங்களில் வெப்பம் உயர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 11

நாட்டின் 18 மாவட்டங்களில் அதிகரித்த வெப்பநிலை நீடிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

அதன்படி மேல், வடமேல், தென், வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் மொனராகல, இரத்தினபுரி மற்றும் திருகோணமலை மாவட்டங்களின் சில பகுதிகளில் வெப்பம் 'எச்சரிக்கை நிலை' வரை அதிகரிக்கக்கூடும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

# வாசனைப் பொருள்கள் இறக்குமதிக்கு அனுமதி

கொழும்பு, மார்ச் 11

மீள் ஏற்றுமதிக்காக வாசனைப் பொருள்களான மிளகு, இஞ்சி, மஞ்சள் உள்ளிட்டவற்றை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு விதிமுறைகளின்கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு உள்நாட்டில் குறைந்தபட்ச மதிப்பான 35 சதவீதத்தை சேர்த்த பின்னர், மறு ஏற்றுமதிக்கு அனுமதிக்கப்படும் என்று நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது. (ச-இ)



# 40 மில்லியன் முட்டைகள் இறக்குமதி

பண்டிகை காலத்துக்காக எதிர்வரும் வாரத்தில் 40 மில்லியன் முட்டைகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படவுள்ளன என்று அரச வர்த்தக சட்ட கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. இதனூடாக தட்டுப்பாடின்றி முட்டையை விற்பனை செய்யமுடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# 13,500 சிகரெட்டுகள்; சிப்பாய்கள் கைது

கொழும்பு, மார்ச் 11

13 ஆயிரத்து 500 சிகரெட்டுக்களை சட்டவிரோதமாகக் கொண்டு சென்ற குற்றச்சாட்டில் இரண்டு சிப்பாய்கள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் கொழும்பிலிருந்து அம்பாறைக்கு அவற்றை எடுத்துச் சென்றபோதே அம்பாறை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர். (ச-இ)

## நாளை

12.03.2024

**செவ்வாய்க்கிழமை**

**மாசி–29**

சுபநேரம் : 10.52 –12.22

ராகுகாலம் : 03.22 - 04.52

## நாளொரு நல்வார்த்தை

**கேள்விகளைக் கேட்பவன் ஐந்து நிமிடம் முட்டாள்,
கேள்வியைக் கேட்காதவன் எப்போதுமே முட்டாள்.**

– கன்பூசியஸ் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலுக்கு தக்கநேரத்தில் இந்துக்கள் பாடம் படிப்பிப்பர்

## சிவசக்தி ஆனந்தன் கண்டனம்

**வவுனியா, மார்ச் 11**

**ஜனாதிபதித் தேர்தலில் இந்துக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கு பாடம் படிப்பிப்பார்கள் என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன்.**

வவுனியாவில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் மகா சிவராத்திரியை முன்னிட்டு நடந்த வழிபாடுகளில் பொலிஸார் நடந்து கொண்ட நடவடிக்கை உலக வாழ் இந்துக்கள் மத்தியில் அதிர்ச்சியையும், அதிர்வலைகளையும் ஏற்படுத்தியுள்ளது.

பூசகர் உட்படப் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். தொடர்ச்சியாக அந்த ஆலய வழிபாட்டுக்கு அரசாங்கம், அமைச்சர்கள், ஜனாதிபதி இடையூறுகளைச் செய்து கொண்டு இருப்பது கண்டிக்கத்தக்கது.

அங்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள்கூட மோசமாக நடத்தப்பட்டுள்ளார்கள்.

அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியோடு பேசி இந்த இடையூறுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்- என்றார். (எ-110)

# நீதிமன்ற உத்தரவை மீறியதாலேயே வெடுக்குநாறிமலையில் 8 பேர் கைது

## பொலிஸார் விளக்கம்

கொழும்பு, மார்ச் 11

வறட்சியான நேரத்தில் வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் மேற்கொள்ளப்பட்ட யாகத்தால் காட்டில் தீ ஏற்படும் வாய்ப்பிருந்தது. நீதிமன்றம் வழங்கிய உத்தரவும் மீறப்பட்டிருந்தது.

வவுனியா, வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் சிவராத்திரி தினத்தில் வழிபாடுகளை மேற்கொண்டமைக்காக ஆலயப் பூசகர் உட்பட 8 பேர் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், பொலிஸ் ஊடகப் பிரிவு அதுதொடர்பாக மேற்கண்டவாறு விளக்கமளித்துள்ளது.

வெடுக்குநாறிமலையில் சிவராத்திரி பூசையை நடத்த அனுமதி வழங்கப்படவேண்டும் என்று ஆலயப் பூசகர் உள்ளிட்ட குழுவினரால் வவுனியா நீதிவான் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தபோதும், அங்கு விசேட பூசைகள் நடத்துவதற்கு அனுமதி வழங்குமுடியாது என்று கடந்த 4ஆம் திகதி நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. சிவராத்திரி தினத்தன்று 500க்கும் மேற்பட்ட மக்கள் வந்து சாதாரணமாக வழிபாடுகளை மேற்கொண்டனர். இரவுநேரத்தில் தொல்லியல் பிரதேசத்தில் பூசகர்கள் மற்றும் 40 பேரைக்கொண்ட குழு நீதிமன்ற தீர்ப்பை மீறி தொல்லியல் திணைக்களம் அல்லது வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தின் அனுமதியின்றி விசேட சிவராத்திரி பூசைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தது. அதையடுத்தே பூசகர் உட்பட 8 பேர் கைது செய்யப்பட்டனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-110)

# அடாவடியை ஏற்கமுடியாது

## டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 11

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் கோவிலில் சிவராத்திரி வழிபாட்டில் ஈடுபட்டிருந்தவர்கள்மீது பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் அனைத்தும் அடாவடித்தனம். இவ்வாறான செயற்பாடுகள் நாட்டில் இன நல்லிணக்கதைச் சீர்குலைக்கும்.

-இவ்வாறு தற்போதைய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஆலய தரிசனம் செய்வது அவரவர் உரிமையாகும். அதைத் தடுப்பதற்கு எவருக்கும் அதிகாரம் கிடையாது. ஆலயப் பகுதியில் பொலிஸார் இவ்வாறான தடைகளையும், அடாவடித்தனங்களையும் செய்வதற்கு யார் அனுமதி கொடுத்தது? நடைபெறவுள்ள அமைச்சரவையிலும் இந்தவிடயம் தொடர்பில் கொண்டு செல்லவுள்ளேன். பொலிஸார் இவ்வாறான செயற்பாடுகளைத் தடுப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (எ-125)

# சுயலாப அரசியலுக்காக மதங்களிடையே முறுகல்

## அமைச்சர் விதுர கூறுகின்றார்



கொழும்பு, மார்ச் 11

அப்பாவி தமிழ்மக்களின் பின்னால் சில அரசியல் தரப்பினர் உள்ளனர். அவர்களே சுயலாப அரசியலுக்காக தமிழ் மக்களைத் தூண்டிவிட்டு முறுகல் நிலைமைகளை உருவாக்குகின்றனர், இதனை அனுமதிக்க முடியாது. தொல்பொருளைப் பாதுகாப்பது தொடர்பாக உரிய சட்ட நடைமுறை பின்பற்றப்படும்.

இவ்வாறு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரம நாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வவுனியாவிலுள்ள வெடுக்குநாறிமலை பிரதேசமானது வனப்பரிபாலன திணைக்களத்தின் கீழுள்ளது. அத்தோடு தொல்பொருளியல் பகுதியாகவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

அந்தப் பகுதிகளில் பிரவேசிப்பது சட்டத்துக்கு முரணான நடவடிக்கையாகும். உரிய அனுமதிகளைப் பெறாமல் அந்தப் பகுதியில் பிரவேசிப்பதை தடுப்பதற்குப் பொலிஸார் தமக்கு அதிகாரமளிக்கப்பட்ட வரையறைகளுக்கமைவாக நடவடிக்கைகளை எடுப்பார்கள்.

வெடுக்குநாறிமலை விடயத்தில், அப்பாவித் தமிழ் மக்களின் பின்னால் சில அரசியல் தரப்பினர் உள்ளனர். அவர்களே தமிழ் மக்களைத் தூண்டிவிட்டு முரண்பாடுகளை ஏற்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொள்கின்றார்கள் - என்றார். (ச-இ)

# உடைமையில் கஞ்சா; சிக்கினார் சிப்பாய்!

முல்லைத்தீவு, மார்ச் 11

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்புப் பகுதியில் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் சிப்பாய்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின்போதே அவர்கள் இருவரும் உடையார்கட்டுப் பகுதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இருவரிடம் மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனையின்போது அவர்கள் இருவரும் கஞ்சா, ஐஸ் உள்ளிட்ட போதைப்பொருள்களைப் பாவித்தமையும் கண்டறியப்பட்டுள்ளது. சந்தேகநபர்களை சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தும் நடைமுறைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-19)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்!

கோப்பாய், மார்ச் 11

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் பொதுக்கூட்டம் மற்றும் புதிய நிர்வாகத் தெரிவுகள் என்பன எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளன.

முதியோர் சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ள பொதுக்கூட்டத்தில் அனைத்து மூத்த பிரஜைகளும் பங்கேற்குமாறு முதியோர் சங்கத்தின் செயலாளர் ந. கனகலிங்கம் மற்றும் தலைவர் த. தெய்வேந்திரராணி ஆகியோர் கேட்டுள்ளனர். (ப-100)

# நோயாளர் விடுதி திறப்பு விழா!

யாழ்ப்பாணம், மார்ச் 11

இளவாலை பிரதேச மருத்துவமனையின் நோயாளர் விடுதித் திறப்பு விழா நிகழ்வு இன்று திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறவுள்ளது. மாவட்ட மருத்துவ அதிகாரி பணிமனை, இளவாலை பிரதேச மருத்துவமனை, இளவாலை நோயாளர் நலன்புரிச் சங்கம் என்பன இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன. நிகழ்வில் வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ம.ஜெகூ, வட மகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி த.சத்தியமூர்த்தி, யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ப-100)



# திருக்கேதீச்சரத்துக்கு சைக்கிள் பயணம்

யாழ்ப்பாணம், மார்ச் 11


சிவராத்திரி தினத்தை முன்னிட்டு சைக்கிள் ஓட்டவீரர்கள் இருவர் திருக்கேதீச்சரத்துக்கு ஆன்மீக பயணத்தை சைக்கிளில் முன்னெடுத்தனர். அவர்கள் சித்தங்கேணி சிவன்கோயிலிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை காலை 5 மணிக்குப் புறப்பட்டு முற்பகல் 10 மணிக்கு திருக்கேதீச்சரத்தை சென்றடைந்தனர். தொல்புரத்தைச் சேர்ந்த வை.கைலைநாதன் (வயது-69) மற்றும் நவாலியைச் சேர்ந்த க.இராசசேகரம் (வயது-54) ஆகியோரே இந்த சைக்கிள் ஆன்மீகப் பயணத்தை மேற்கொண்டனர். (ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஹாட்லிக்கல்லூரியின், இங்கிலாந்தில் வசிக்கும் பழைய மாணவர்களின் ஒருங்கிணைந்த அமைப்பான "ஹாட்லியைற்ஸ் விளையாட்டுக் கழகம் யூகே" இன் நிதி அனுசரணையில் வடமராட்சி, பொலிகண்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலைக்கு விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக குறித்த அமைப்பின் தலைவர் அருந்தவராஜா, ஹாட்லிக்கல்லூரியின் தாய்ச்சங்கத் தலைவர் முரளி மற்றும் ஹாட்லிக்கல்லூரியின் பழைய மாணவர்கள் கலந்து சிறப்பித்தனர்.

(எ-26)




தென்னைப் பயிர்ச்செய்கையில் நோயை ஏற்படுத்தும் வெள்ளை ஈ பூச்சிகளை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்பது தொடர்பில் வடமாகாண தென்னைப் பயிர்ச்செய்கையின் பிராந்திய முகாமையாளர் தேவராஜா வைகுந்தனால் கிளிநொச்சி, அம்பாள்குளத்தில் அண்மையில் விழிப்புணர்வுக் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. (எ-113)

பச்சிலைப்பள்ளிப் பிரதேச கலாசாரப் பேரவை மற்றும் கலாசார அதிகாரசபைகளுக்கான பொதுச்சபைக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த 6ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்றன. பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உதவிப் பிரதேச செயலர், கலாசாரப் பேரவையின் உறுப்பினர்கள், கலைமன்றங்களின் உறுப்பினர்கள், பிரதேச கலைஞர்கள், பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(எ-9)





அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச்சென்ற அதிபர் கு.லங்காதீபனின் பிரியாவிடை நிகழ்வு பாடசாலை அதிபர் வை. பிரதீபன் தலைமையில் கடந்த புதன்கிழமை பாடசாலை திறந்த வெளி அரங்கில் நடைபெற்றது. நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பாடசாலைச் சமூகத்தினர் கலந்து கொண்டனர். (எ-36)



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தேசிய சேமிப்பு வங்கியின் பருத்தித்துறை கிளையின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர்தினவிழா வங்கி முகாமையாளர் அ.கெங்காதரன் தலைமையில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெற்றது. ஈழத்து இசைக்குயில் கில்மிஷாவும், தடகள சம்பியன் ஸ்ரீ.அகிலத்திருநாயகியும் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர். (எ-100-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவைப் புறக்கணிப்பதால் மாலைதீவுக்கு பின்னடைவு

புதுடில்லி, மார்ச் 11

இந்தியாவைப் புறக்கணிப்பதால், மாலைதீவு அண்மைக்காலமாக மிகப்பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளதாக மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மொகமட் நஷீத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவைப் புறக்கணித்தமையானது மாலைதீவை மிகவும் பாதித்துள்ளது, தற்போது இந்தியாவில் இருக்கும் நான்கூட, இது குறித்து மிகவும் கவலைப்படுகிறேன். மாலைதீவு மக்களும் இதுகுறித்து வருந்துகிறார்கள். இந்திய மக்கள் தங்கள் விடுமுறை நாள்களில் மாலைதீவுக்கு வரவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

எங்களுடைய விருந்தோம்பலில் எந்த மாற்றமும் இருக்காது என்றும் மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி நஷீத் மேலும் தெரிவித்தார். (ம)

THE ROYAL COLLEGE OF JAFFNA
3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில.
By ந.விக்னேஸ்வரன் ஆச்சார்யார்
(ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்) (M.L.T), (M.L.S)
குபேரன் கட்டட மாடி,
பிரான் பற்று வீதி, சங்கானை.
077 675 1649
(CS/24042) N-1

ஆசிரியர் தேவை
திருநெல்வேலி சிமாட் கிட்ஸ் முன்பள்ளிக்கு
ஆங்கில ஆசிரியர் (பெண்) தேவை.
தகைமைகள் பரிசீலிக்கப்படும் உடன் தொடர்புகொள்ளவும்.
திருநெல்வேலி சிமாட் கிட்ஸ்
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு.
077 386 7458, 021 221 6933

# ஹமாஸ் - இஸ்ரேல் பேச்சுகள் தோல்வி

கெய்ரோ, மார்ச் 11

**போர் நிறுத்தம் தொடர்பில் இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையில் முன்னெடுக்கப்பட்டுவந்த பேச்சுகள் தோல்வியில் முடிந்துள்ளன.**

ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதியன்று இஸ்ரேலுக்குள் புகுந்து ஹமாஸ் அமைப்பினர் மேற்கொண்ட தாக்குதலின் பின்னர், கடந்த நான்கு மாதங்களாக காஸாவில் இஸ்ரேல் இராணுவம் தனது நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்தது. ஹமாஸ் அமைப்புக்கு எதிரான இராணுவ நடவடிக்கை என்று இந்த நடவடிக்கையை இஸ்ரேல் அடையாளப்படுத்திய போதிலும், போரில் பொதுமக்களே அதிகம் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து, காஸாவில் அமைதியை ஏற்படுத்த எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் கடந்த நான்காம் திகதிமுதல் பேச்சுகள் முன்னெடுக்கப் பட்டுவந்த நிலையில், எந்தவொரு நிபந்தனைக்கும் இஸ்ரேல் உடன்படாததையடுத்து பேச்சுகள் தோல்வியில் முடிந்துள்ளன.

இந்த நிலையில், அடுத்த 14 நாள்களுக்குள் மற்றொரு அமைதிப் பேச்சு முன்னெடுக்கப்படும் என்றும், காஸாவில் அமைதியை ஏற்படுத்த முடியுமான அத்தனை நடவடிக்கைகளையும் எகிப்து மேற்கொள்ளும் என்றும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)



# அமெரிக்காவுக்குப் போட்டியாக வடகொரியாவும் போர்ப்பயிற்சி!


பியாங்யாங், மார்ச் 11

தென்கொரியாவை அண்டிய எல்லைப் பகுதியில் வடகொரியா தீவிரமான போர்ப்பயிற்சிகளில் கடந்த இரண்டு நாள்களாக ஈடு பட்டு வருகின்றது.

கடந்த ஒரு வாரமாக அமெரிக்க இராணுவத்துடன் இணைந்து தீவிரமான போர்ப்பயிற்சியில் தென்கொரியா ஈடுபட்டு வருகின்றது. வருடாவருடம் இவ்வாறான போர்ப்பயிற்சிகளை தென் கொரியா மேற்கொள்கின்ற போதிலும், இம்முறை முன்னெடுக்கப் பட்டுவரும் போர்ப்பயிற்சியில் மிக அதிகளவான அமெரிக்க இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் தென்கொரியாவும் இராணுவத்தினரின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளது. எதிர்வரும் 14ஆம் திகதிவரை இந்தப் போர்ப்பயிற்சிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அமெரிக்கா - தென்கொரியாவின் இராணுவப்பயிற்சிகளைதன்பாதுகாப்புக்கான அச்சுறுத்தல் என்று எச்சரித்த வட கொரியா, தென்கொரியாவின் இராணுவப் பயிற்சிகள் மேற்கொள்ளப்படும்சமநேரத்தில் தனது எல்லைப் பகுதியிலும் போர்ப் பயிற்சிகளை நடத்தி வருகின்றது. (ம)

15ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 15.03.1939 மறைவு : 11.03.2009

அமரர் உயர்திரு. வயிரமுத்து குலசிங்கம்
(ஓய்வுபெற்ற நீர்ப்பாசனத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் நாயகம், இலங்கை)

எங்கள் அன்புத் தெய்வமே
கலகலப்பான பேச்சும் கனிவான புன்னகையும்
பாசமும் கொண்டு உறவாடி மகிழும்
உங்கள் இனிய முகம் காணவே துடிக்கின்றோம் ஐயா!
எத்தனை உறவுகள் இருந்தாலும் அத்தனையும் உங்களுக்கு
ஈடு இணையாகுமோ!

உங்கள் பிரிவால் வாடித்
தவிக்கும் உங்கள் உறவுகள்
மனைவி,
பெறாமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், அமத்துவிமார்

Mrs.S.Kulasingam
London.
11.03.2024
(cs.24042) (N-1)

திறக்கப்படாத பரசூட்

# உணவுப்பொதி வீழ்ந்து காஸாவில் ஐவர் சாவு!

காஸாவுக்குள், அமெரிக்கா பரசூட் மூலம் வீழ்த்திய உணவுப் பொதிகள் வீழ்ந்ததில் ஐந்து பேர் உயிரிழந்தனர். 10 பேர் காயமடைந்தனர். கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர், காஸாவில் உணவுக்காக வரிசையில் நின்ற மக்கள் மீது இஸ்ரேலியப் படைகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 150க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 800க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். இஸ்ரேலின் இந்த நடவடிக்கைக்கு உலகெங்கும் இருந்து கண்டனங்கள் குவிந்தன.

இதையடுத்து பரசூட் வழியாக உணவுப் பொதிகளை கீழிறக்கும் நடவடிக்கையை மேற்கொண்டு அமெரிக்கா. 38,000 தொன் உணவுப் பொருள்கள் இவ்வாறு விமானங்களில் இருந்து இறக்கப்பட்டன. வீசப்பட்ட உணவுப் பொதிகளை மிதமான வேகத்தில் கீழிறக்க வேண்டிய பரசூட்கள் உரிய நேரத்தில் திறக்காததை யடுத்து, உணவுப் பொதிகள் அசுர வேகத்தில் வீழ்ந்ததில் ஐந்து பேர் உயிரிழந்தனர். 10 பேர் காயமடைந்து அல்ஷிபா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கையிருப்பிலுள்ளவற்றில்

# பெரும்பாலான மருந்துகள் காலாவதியானவையே!!!

கொழும்பு, மார்ச் 11

தற்போது கையிருப்பிலுள்ள பெரும்பாலான மருந்துகள் காலாவதியானவை என சுகாதாரத் திணைக்கள மருந்து வழங்கல் பிரிவு தெரிவித்துள்ளது.

2022ஆம் ஆண்டு நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டவேளையில் பெருமளவு மருந்து வகைகள் அன்பளிப்பாகக் கிடைத்தன. இவற்றில் பெரும்பாலானவை குறுகிய காலாவதித் திகதியைக்கொண்டவை.

2023ஆம் ஆண்டு இறுதியிலும் பெருமளவு மருந்து வகைகள் அன்பளிப்பாகக் கிடைத்தன. இவற்றில் பெரும்பாலானவை குறுகியகால காலாவதி திகதியைக்கொண்டவை. ஆனால் அத்தியாவசியமான மருந்துகள். எனவே இந்த விடயம் தொடர்பாக சகல மருத்துவமனைப் பணிப்பாளர்களுக்கும் சுற்றறிக்கைகளையும் அனுப்பியுள்ளோம்.

எவ்வளவு விரைவாகக் காலாவதித் திகதி முடிய முன்னர் இந்த மருந்துகளை விநியோகிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக விநியோகித்து முடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. குறைந்த அல்லது நடுத்தர வருமானம் பெறும் நாடுகளில் காலாவதித் திகதி முடிவடைந்த மருந்துகளை அழிப்பது பெரும் பிரச்சினையாக உள்ளது எனவும் மருந்து வழங்கல் பிரிவு தெரிவித்துள்ளது. (ஓ-6)

## இராணுவத்தினரின் வாகனம்மோதி பெண் ஒருவருக்கு படுகாயம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

இராணுவத்தினரின் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

எழுதுமட்டுவாழ் கிழக்கில் பிரதான வீதியில் நேற்று மாலை இடம்பெற்ற இந்த விபத்தில், அதேயிடத்தைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை வசந்தாதேவி (வயது - 60) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஓ-131)

## அணுசக்திக் கொள்கையை பலப்படுத்தவுள்ளது சீனா!



பீஜிங், மார்ச் 11

அணுசக்தி தொடர்பான மேம்பட்ட கொள்கைகளை உருவாக்குவதற்கு சீன காங்கிரஸ் கட்சி தீர்மானித்துள் ளது.

சீனாவில் காங்கிரஸ் கட்சியின் ஒருகட்சி ஆட்சிமுறை நடைமுறையில் உள்ளது.

இந்தக் கட்சியின் வருடாந்த உயர்மட்டக் கூட்டம் பீஜிங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது. இந்தக் கூட்டத்திலேயே சீனாவின் தேசியப் பாதுகாப்புத் தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தேசியப் பாதுகாப்பு மற்றும் நவீனப்படுத்தல் குறித்தான சட்டங்கள் இயற்றப்படும் என சீனாவின் உயர்மட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் இதன்போது உறுதியளித்துள்ளனர்.

தேசியப் பாதுகாப்புக் குறித்தான நிபுணர்களின் ஆய்வுகளின் பிரகாரம் புதிய சட்டத்தினைக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம)

## ரஷ்யாவுக்கு எச்சரிக்கை

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில், தீவிரவாதத் தாக்குதல் நடத்தப்படலாம் என்றும் அது தொடர்பில் எச்சரிக்கையுடன் இருக்குமாறும் ரஷ்யாவில் உள்ள அமெரிக்கர்களுக்கு வொஷிங்டன் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மொஸ்கோவில் உள்ள அமெரிக்கர்கள் சனநெரிசல்மிக்க இடங்களுக்குச் செல்வதையும் தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

மொஸ்கோவில் தீவிரவாதத் தாக்குதல் நடைபெற வாய்ப்பிருப்பதாக உளவுத் தகவல்கள் கூறுகின்றன என்று தனது எச்சரிக்கைக் குறிப்பில் அமெரிக்கா தெரிவித்துள்ளது. (ம)

## கடல்வழியாக காஸாவுக்குள் உதவிப்பொருள்


காஸாவுக்குள் உதவித்திட்டங்களைக் கொண்டுசெல்வதற்காக, கடல்வழி வழித்தடமொன்று ஓரிரு தினங்களுக்குள் உருவாக்கப்படும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

காஸாவில் கடந்த ஐந்து மாதங்களாக இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அமைப்புக்கும் இடையில் தீவிரமான மோதல் இடம்பெற்று வருகின்றது. இதனால் வரலாறு காணாத மனிதப் பெருநெருக்கடியும் பஞ்சமும் காஸாவை ஆட்கொண்டுள்ளது. காஸாவுக்குள் நில வழியாக உதவித் திட்டங்கள் செல்வதற்கு இஸ்ரேல் பல்வேறுபட்ட தடைகளையும், கட்டுப்பாடுகளையும் விதித்துள்ள நிலையில் கடல் வழியாக உதவித்திட்டங்களை வழங்க ஐரோப்பிய ஒன்றியம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

காஸாவில் தற்காலிகத் துறைமுகம் ஒன்றை அமைக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி பைடன் கருத்துத் தெரிவித்து 24 மணிநேரத்தில் ஐரோப்பிய ஒன்றியமும் கடல்வழியான தனது உதவித்திட்டங்களை அறிவித்துள்ளது.

காஸாவுக்காகத் திரட்டப்பட்ட உதவித்திட்டங்கள் சைப்ரஸில் தற்போது வைக்கப்பட்டுள்ளன. அவை இன்னும் ஓரிரு தினங்களில் கடல்வழியாக காஸாவைச் சென்றடையும் என்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 02.03.1945 | மறைவு 11.02.2024

**அமரர் வேலுப்பிள்ளை பரராஜசிங்கம்**

கடந்த 11.02.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் வேலுப்பிள்ளை பரராஜசிங்கம் அவர்களின் இறுதிக் கிரியைகளிலும் நேரில் கலந்து கொண்டும், தொலைபேசி மற்றும் அனைத்து வழிகளிலும் அனுதாபங்களைத் தெரிவித்தும் எம் துக்கத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.


அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு 12.03.2024 செவ்வாய்க்கிழமை காலை 09.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

"கலா காமன்"
335/7, மன்னார் வீதி,
வேப்பங்குளம், வவுனியா.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி விநாயகமூர்த்தி

மட்டுவில் தெற்கு மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் வைத்தியசாலை வீதி முழங்காவிலை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி விநாயகமூர்த்தி அவர்கள் 2024.03.08 அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் இரத்தினாவதியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற இளையதம்பி - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நாகேஸ்வரி, இராஜேஸ்வரி, தெய்வநாயகி ஆகியோரின் அன்பு சகோதரனும் காலஞ்சென்ற கந்தசாமி, கமலநாதன், செல்வராசா ஆகியோரின் மைத்துனரும் சசிகலா (ஆசிரியர், கிளி/ கரியாலைநாகபடுவான் இல.02 அ.த.பா), உதயணன், விஜி(ஆசிரியர், யாழ் இந்து மகளிர் கல்லூரி), அமரர் சுரேஸ், வாசுகி(கிராம அலுவலர் - ஜெயந்திநகர்), அருளினி(அதிபர், கிளி/வலைப்பாடு அ.த.க.பா), வினோ(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வராஜேஸ்வரன், ஜெயவதனி, ஆனந்தநடராஜன்(ஓய்வுபெற்ற ஆசிரியர்), நடேசமூர்த்தி(அதிபர், கிளி/பரந்தன் இந்து ம.வி), நகுலேஸ்வரன், ராதா(லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கௌரிகா, குயின்சனா(லண்டன்), கௌசிகா(ஜேர்மன்), கௌதமன், கௌசிகன், அகல்யா(இலங்கை வங்கி), அபிநயா, அனோயா, கரிகாலன், சனோபா, சமரானன், ஓவியா, கலைஞன், ரஜீந்தன், சுரேன், செந்தூரன், சுஜிதா ஆகியோரின் அன்புப் பேரனும் மகிஷாந், குந்தவை, குற்றாலன், கஸ்வி ஆகியோரின் பாசமிகு பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (2024.03.11) இன்று திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மதியம் 1.00 மணியளவில் அன்புபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

வைத்தியசாலை வீதி,
முழங்காவில்.

தகவல் :
077 897 6927(மகன்)
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சஜித்...

களை முன்வைத்தார். ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், ஐக்கிய தேசியக் கட்சி ஏற்பாடு செய்த முதலாவது கட்சிசார் கூட்டத்தில் அவர் பங்கேற்ற முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

"நாடாளுமன்றத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்கெடுப்பின்போது ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவைக் கோரினேன். அவர்களுடன் இணைந்து ஆட்சியமைக்க விரும்பினேன். ஆனால் அவர்கள் முன்வரவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினருக்கு ஆதரவு வழங்காமல், டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவு வழங்கினர். அதுவும் டலஸின் கீழ் வேலைசெய்யத் தயாராகினர்.

மஹிந்த ராஜபக்சவிடம் நானும் ஆதரவு கோரினேன். அவர்களும் (டலஸ், சஜித்) கோரினர். இன்று மஹிந்தவை விமர்சிப்பவர்கள் அன்று மலர்க்கொத்துடன் சென்று சந்தித்தனர். நான் தொலைபேசி ஊடாகக் கலந்துரையாடினேன். வாக்குக்கேட்கும்போது மஹிந்த நல்லவர், இன்று கெட்டவர். எனவே, போலி அரசியல் நடத்த வேண்டாம் என ஐக்கிய மக்கள் சக்தியிடம் கோருகின்றேன். மஹிந்த சரியில்லை என்றார்கள். ஆனால் அவரின் சகாவான பீரிஸை எடுத்துக்கொண்டனர். மஹிந்தவின் சகா நல்லம், மஹிந்த சரியில்லை. இது என்ன கோட்பாடு எனப் புரியவில்லை. முடிந்தால் மஹிந்தவை எதிர்த்துப் பேசுமாறு பீரிஸிடம் கூறட்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு ஐக்கிய மக்கள் சக்தியில் இன்று இடமில்லை. பீரிஸ், நாலககொடஹேவா போன்றவர்களே அங்கு தீர்மானிக்கின்றனர். திங்கட்கிழமை நடைபெறும் கூட்டத்தைக்கூட அவர்களின் ஆலோசனைக்கமையவே தவிர்த்துள்ளனர். எனவே, எம்முடன் இணையுமாறு ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ளோருக்கு அழைப்பு விடுக்கின்றேன்" எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (அ-ஒ-44)

## 15 வயதுச்...

தெரிவித்தனர். சிறுவன் கசிப்பை உடைமையில் எடுத்துச் சென்றபோதே கைது செய்யப்பட்டுள்ளான் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ-27)

## நிமோனியாவால்...

வீதி, துன்னாலை வடக்கு கரவெட்டியைச் சேர்ந்த முத்துலிங்கம் சிவதர்ஷன் (வயது - 29) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வாய் அவிச்சல் ஏற்பட்டதன் காரணமாக மருத்துவமனையில் சில தினங்களுக்கு முன்னர் சிகிச்சை பெற்ற அவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வீட்டில் மயங்கிச் சரிந்து உயிரிழந்துள்ளார்.

இதையடுத்து சடலம் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டது.

சடலத்தின் மீது பருத்தித்துறை இறப்பு விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனையில் நிமோனியாத் தொற்றினாலேயே உயிரிழப்புச் சம்பவித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-100)

## 100 லட்சம்...

பெறுவார் - இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து ஐக்கிய தேசியக் கட்சியால் நடத்தப்பட்ட முதலாவது பொதுக்கூட்டம் 'நிதர்சனம்' எனும் தொனிப்பொருளின்கீழ் குருநாகல், குளியாப்பிட்டியவில் நடைபெற்றது. அந்தக் கட்சியின் உப தலைவர் அகிலவிராஜ் காரியவசம் இந்தக்கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார்.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய வஜிர மேலும் தெரிவித்ததாவது:-

பொய்கள் மூலமே ரணில் விக்கிரமசிங்க தோற்கடிக்கப்பட்டார். 2020 பொதுத் தேர்தலின்போதும் உண்மை தோற்கடிக்கப்பட்டது. ஆனால் அதன்பின்னர் உண்மை வென்றது. தனி ஒருவனாக நிறைவேற்று ஜனாதிபதிப் பதவிக்கு ரணில் விக்கிரமசிங்க தெரிவானார். இது உலகசாதனையாகும்.

இவ்வருடம் ஒக்ரோபர் மாதம் நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் இலங்கை வரலாற்றில் அதிகூடிய வாக்குகளைப் பெற்ற அதாவது 100 இலட்சம் வாக்குகளைப் பெற்ற நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க வரலாற்றில் இடம்பிடிப்பார் - என்றார். (அ-ஒ-44)

## பொலிஸாரின்...

யுறுத்தப்பட்டு வரும் சூழலில் இந்த செயற்பாடுகள் இடம்பெற்றிருப்பது மத நல்லிணக்கம் தொடர்பான ஐயப்பாடுகளை ஏற்படுத்துவதாக இருக்கின்றது. சிவராத்திரி வழிபாட்டில் அசம்பாவிதங்கள் நடைபெற்றது சைவர்களாகிய ஒவ்வொருவரையும் மிகவும் மனரீதியாக வேதனைப்படவைக்கிறது. அவர்களுடைய வழிபாடுகளை சிதைப்பதனூடாக ஓர் இனத்தினுடைய பண்பாட்டு அடையாளங்களைக் கேள்விக்குட்படுத்துதல் என்பது உண்மையிலே ஏற்றுக்கொள்ளமுடியாத ஒன்றாகவே இருக்கிறது. இவ் அடிப்படை வழிபாட்டுரிமையை மீறும் செயலானது உலகுக்கு எமது நிலையை அரசாங்கம் வெளிப்படுத்தி இருக்கிறது. இவ்வகையில் வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் கோவிலில் நடைபெற்ற மோசமான வழிபாட்டுரிமை மீறல் மற்றும் மனிதநேயமின்மைசம்பவங்களைக் கண்டித்தும் கைது செய்யப்பட்ட பக்தர்களை விடுவிக்கக்கோரியும் வலியுறுத்தி நிற்கின்றோம். இலங்கைப் பொலிஸாரது அட்டூழியங்களையும், இலங்கை அரசின் இவ்வாறான செயலையும் கண்டிக்கின்றோம்- என்றுள்ளது. (அ-ஒ-27)

# மரண அறிவித்தல்



தோற்றம் 03.08.1976

மறைவு 07.03.2024

## இராஜேஸ்வரன் தர்மேந்திரா (தர்மா)

அராலி மத்தி, வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும், கொழும்பு மற்றும் சென்னையை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேஸ்வரன் தர்மேந்திரா (தர்மா) அவர்கள் கடந்த (07.03.2024) வியாழக்கிழமை சென்னையிலே சிவபதப்பேறு பெற்றார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரசேகரம் பெஞ்சமின் - புஸ்பம் சோதிமணி தம்பதியினரினதும், காலஞ்சென்ற சின்னையா நல்லம்மா தம்பதியினரினதும் அன்புப் பேரனும், காலஞ்சென்ற இராஜேஸ்வரன் மற்றும் புவனேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும், ஜனார்த்தனி, ஜயந்தினி ஆகியோரின் அன்புத் தம்பியும், கிருஷ்ணபாலன், சத்தியேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், றவீன், மயூரிக்கா, வினுஷன் , சஜின் ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் (13.03.2024) புதன்கிழமை, No 12 Navis Apartment Velmurugan colony Keellkatalai chennai 117 , இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் முற்பகல் 10.15 மணிக்கு இடம்பெற்று, தகனக்கிரியைகளுக்காக கீழ்கட்டளை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அராலி வண்ணப்புரம் ஸ்ரீ விசாலாக்ஷி அம்பாள் சமேத விஸ்வநாதேஸ்வர பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

கிருஷ்ணபாலன் (கனடா) +14169105324
சந்திரகுமார் (கனடா) +14169704454
சத்தியேந்திரன் (நோர்வே) +4745048000
இந்திராதேவி (இலங்கை) +94772165356
வசந்தா (இலங்கை) +94764488785
தாட்சாயினி (இந்தியா) +919941477295

தகவல்: குடும்பத்தினர்.

(CR 42092) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசமைப்பை...

இனவாதத்தையும், மதவாதத்தையும் முன்னெடுக்கும் அரசமைப்பும், அரசுக் கட்டமைப்பும் மாற்றப்பட்டால் மாத்திரமே இலங்கையில் வாழும் மக்கள் அனைவரும் இன, சமய ரீதியிலே சமத்துவம் மிக்கவர்களாக வாழமுடியும். வெடுக்குநாறிமலைப் பிரச்சினைக்கு எதிராகக் குரல் கொடுக்கும் அனைவரும் இவ்வாறான அரசியல் மாற்றங்களை வலியுறுத்துவதன் மூலமாக இனவாதத்தையும், மதவாதத்தையும் முறியடிக்க முன்வரவேண்டும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் தலத்தில் சிவராத்திரி தினத்தன்று பொலிஸார் மேற்கொண்ட அத்துமீறல்களைக் கண்டித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வெளியிட்ட அறிக்கையில் இந்தவிடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

**கண்டனம்**

கடந்த மகாசிவராத்திரி தினத்தன்று இரவு வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் தலத்திலே வழிபாட்டிலே ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயக் குருக்கள், பொது மக்கள், அரசியல் தலைவர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட அத்துமீறல்களையும், அவர்கள் அங்கு இருந்தோரிலே பலரைக் கைது செய்தமையையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

**உரிமைகளை மீறும் செயல்**

மகாசிவராத்திரி சைவ, இந்து மக்களுக்கு மிகவும் முக்கியமான தினங்களிலே ஒன்று. அந்தத் தினத்திலே உலகெங்கும் வாழும் சைவ, இந்து மக்கள் ஆலயங்களிலே இரவு முழுவதும் விழித்திருந்து சமய அனுட்டானங்களிலே ஈடுபடுவர். அவ்வாறான ஒருவேளையிலே பொலிஸார் ஆதிலிங்கேஸ்வரர் தலத்தினுள் நுழைந்து அது தொல்பொருள் ஆய்வுக்குரிய பாதுகாக்கப்பட்ட இடம் என்ற போர்வையிலே அங்கு அனுட்டானங்களிலே ஈடுபட்டிருந்த மக்களிற்கு பல இடையூறுகளை ஏற்படுத்தி இருக்கின்றனர். அவர்களுக்குத் தேவையான குடிதண்ணீர் கிடைப்பதனைத் தடுத்து நிறுத்தி இருக்கின்றனர். பின்னர் பூசைகளைக் குழப்பி உள்ளனர். வழிபாட்டில் ஈடுபட்டோரை பலவந்தமாக வெளியேற்றியும் கைது செய்துமுள்ளனர். இவை யாவும் அந்த மக்களின் சமய ரீதியிலான உரிமைகளை மோசமாக மீறும் செயல்களாகும் என்பதனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டுகிறது.

**ஆகப்பிந்திய வன்முறை வடிவம்**

வெடுக்குநாறிமலையில் இடம்பெற்றிருக்கும் இந்தச் சம்பவம் வெறும் வன்முறையும், அத்துமீறலும் மாத்திரம் அல்ல. இது இலங்கையில் தொடரும் சிங்கள - பௌத்த மேலாண்மைவாதக் கருத்தியலின் ஆகப் பிந்திய வன்முறை வடிவங்களிலே ஒன்று. சிறுபான்மையாக இருக்கும் மக்களின் மத உரிமைகளைப் பாதிக்கும் செயன்முறைகளை இலங்கையினை ஆட்சி செய்யும் அரசாங்கங்கள் காலங்காலமாக மேற்கொண்டு வந்திருக்கின்றன. இந்தச் செயன்முறைகளால் இந்து சமயத்தவர் மாத்திரமல்லாது, கிறிஸ்தவர்களும், இஸ்லாமியர்களும் பாதிக்கப்பட்டு வந்திருக்கின்றனர். பௌத்த மதத்துக்கு முன்னுரிமை கொடுக்கும் அரசமைப்பைக் கொண்டிருக்கும் ஒரு நாட்டில், சிறுபான்மை மக்களின் மத உரிமைகளை மீறும் போக்குகள் அரசமைப்பின் கருத்தியலுக்குள்ளேயே பொதிந்து போய் இருக்கின்றன என்பதனை நாம் இங்கு சுட்டிக்காட்டுவது அவசியம். வெடுக்குநாறிமலைச் சம்பவம் இலங்கை அரசின் மதவாதக் குணாம்சத்தால் ஏற்பட்ட ஒரு கட்டமைப்பு சார் விடயமாகவே பார்க்கப்படல் வேண்டும்.

**பௌத்தமயமாக்கல்**

தமிழ் பேசும் மக்கள் சமூகங்கள் பெரும்பான்மையாக வாழும் இலங்கையின் வடக்கு-கிழக்கினைப் பௌத்த மயமாக்கம் செய்வதன் மூலமும், சிங்கள மயமாக்குவதன் மூலமும் இந்தப் பிராந்தியத்தில் வாழும் தமிழ், முஸ்லிம் சமூகங்களை அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், கலாசார ரீதியாகவும் வலுவிழக்கச் செய்யும் செயன்முறைகளிலே இலங்கை அரசாங்கங்கள் பல தசாப்தங்களாக ஈடுபட்டு வந்திருக்கின்றன. இந்தச் செயன்முறைகளின் ஒரு வடிவமாகத் தொல்பொருளியல் ஆய்வு என்ற போர்வையில் வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் தலத்தையும் ஏனைய பல சைவ, இந்து மக்கள் வழிபடும் தலங்களையும் சிங்கள - பௌத்த மயமாக்கும் நடவடிக்கைகள் அண்மைய சில வருடங்களாகத் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன.

**தொடர் வன்முறையின் விளைவு**

கொழும்பில் இருந்து, மையப்படுத்தப்பட்ட முறையிலே, இராணுவக் கட்டமைப்புகளின் துணையுடன், சிங்கள - பௌத்தக் கருத்தியலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் இந்தத் தொல்பொருளியல் செயன்முறைகளின்போது வடக்கு - கிழக்கிலே பல சந்ததிகளாக இந்தத் தலங்களிலே தமது சமய அனுட்டானங்களில் ஈடுபடும் மக்களின் உரிமைகளுக்கும், கருத்துகளுக்கும் எந்தவிதமான இடமும் வழங்கப்படுவதில்லை. மாறாக தொல்பொருளியல் ஆய்வு என்பது இந்த மக்களின் மீதும், அவர்களின் சமய நம்பிக்கைகள் மற்றும் செயன்முறைகளின் மீதும் ஒரு வன்முறையாகவே ஏவப்படுகிறது. இந்தவன்முறையின்ஒருவிளைவே கடந்த சிவராத்திரி தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட அத்துமீறல்களும் கைதுகளும்.

கைது செய்யப்பட்ட அனைவரும் உடனடியாக வழக்குகள் எதுவுமின்றி விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், வடக்கு - கிழக்கிலே தொல்பொருளியல் ஆய்வு என்ற பெயரிலும், வனப்பாதுகாப்பு என்ற பெயரிலும், மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் என்ற பெயரிலும் ஏனைய வடிவங்களிலும் இடம்பெறும் சிங்கள - பௌத்த மயமாக்கற் செயன்முறைகள் யாவும் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் எனவும் கோருகிறது - என்றுள்ளது. (அ-ஒ-125)

## உரிமைகள்...

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் மகாசிவராத்திரி தினத்தில் அரங்கேறிய பொலிஸ் அராஜகத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து மட்டக்களப்பில் கண்டனப் போராட்டம் ஒன்று நேற்று இடம்பெற்றது.

'உரிமைகள் மறுக்கப்படும்போது ஊமைகளாக இருக்கமுடியாது' எனும் தொனிப்பொருளில் வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில், சிவராத்திரி நாளில் மதவழிபாட்டுரிமை மறுக்கப்பட்டமைக்கும், பொலிஸாரின் அராஜக வெறியாட்டத்துக்கும் எதிரான அகிம்சைப் போராட்டம் ஒன்று நேற்றையதினம் மட்டக்களப்பில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு காந்தி பூங்கா அருகில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் மதத் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம் (ஜனா), நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், பா.அரியநேத்திரன், சீனித்தம்பி யோகேஸ்வரன், தமிழரசுக்கட்சியின் முக்கியஸ்தர்களான மா.உதயகுமார், மா.நடராஜா, மாநகர முன்னாள் முதல்வர் தி.சரவணபவான் மற்றும் பெண்கள் அமைப்புகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு காந்திப் பூங்கா அருகில் கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், அங்கிருந்து மட்டக்களப்பு மணிக்கூண்டுக் கோபுர சுற்றுவட்டம் ஊடாக ஊர்வலத்தில் ஈடுபட்டு பசார் வீதி ஊடாகச் சென்று காந்தி பூங்காவை வந்தடைந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், எங்கள் தேசத்தில் எங்கள் புராதன ஆலயத்தில், எங்கள் மக்களுக்கான மத கலாசார உரிமை பொலிஸாரால் மறுக்கப்பட்டுள்ளது. அடாவடித்தனமாக மதத் தலைவர்கள், பூசகர்கள், நாடாளுமன்ற உறுப்பினர், பெண்கள் உட்பட பக்தர்கள் அவமரியாதைப்படுத்தி பலாத்காரமாக இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர். இச் செயற்பாடானது வன்மையான கண்டனத்துக்குரியது என்பதுடன், சர்வதேசம் இவ்வாறான செயற்பாடுகளுக்கெதிராக இலங்கை மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன், தமிழ் மக்களது வழிபாட்டு, மத, பண்பாட்டுச் சுதந்திரத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் கோரிக்கைவிடுத்தனர். (அ-ஒ-100)

## மருத்துவமனையில்...

வெடுக்குநாறிமலையில் சிவராத்திரி வழிபாடுகளில் ஈடுபட்ட 8 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில் அவர்களைச் சட்டமருத்துவ அதிகாரியிடம் முற்படுத்துமாறு நீதிமன்றம் பணித்தும் அதனைத் தாமதப்படுத்தியதுடன், சட்டமருத்துவ அதிகாரி மருத்துவமனையில் அவர்களைச் சேர்க்குமாறு பணித்தபோதும் அதையும் இழுத்தடித்ததாகப் பாதிக்கப்பட்டோர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி க.சுகாஷ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - நேற்று விடுமுறை நாள் என்பதால் சிறைக்கைதிகளைப் பார்வையிடுவதற்கு சந்தர்ப்பம் இல்லை. இதனால் மருத்துவமனையில் வைத்து அவர்களுக்கான மாற்று ஆடைகள் வழங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. எனினும் சிறைக்காவலர்கள் அதற்குஅனுமதிவழங்கியிருக்கவில்லை. இதனால் கடந்த இருதினங்களாக அவர்கள் கைதுசெய்யப்படும் போது அணிந்திருந்த ஆடைகளையே அணிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-110)

## வடக்கு...

அமைப்பின் பிரதிநிதிகள் அமைதியாக இருக்குமாறு கோருகின்றேன் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் முப்படையினர் வசமிருந்த 109 ஏக்கர் காணி உரிமையாளர்களிடம் கையளிக்கும் நிகழ்வு யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம் பெற்றது. தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஆலோசகரும், ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு காணி உரிமையாளர்களிடம் காணிப் பத்திரங்களை வழங்கினார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

முப்படையினரும் மக்களுக்காகத்தான் சேவை செய்கின்றனர் என யாழ். மாவட்ட கட்டளை தளபதி தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். ஆனால் போர் நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்திலேயே எனது கருத்து இதுவாகத்தான் இருந்தது. பாதுகாப்புத் தரப்பினர் எமது மக்கள் படையாக, மக்களுக்கான படையாக செயற்படுவர் என்றும் செயற்படவேண்டும் என்ற கருத்தையும் நான் முன்வைத்திருந்திருக்கின்றேன். இதேநேரத்தில் எமது மக்களது இன்னும் பல காணிகள் விடுவிக்கப்பட வேண்டியிருக்கின்றன. நிச்சயமாக அந்தக் காணிகளும் விடுவிக்கப்படும்.

இந்திய இழுவைப்படகால் பாதிக்கப்படுகின்ற கடற்றொழில் அமைப்புகளின் பிரதிநிதிகளும் இருக்கின்றனர். நேற்றுக்கூட (நேற்றுமுன்தினம்) 3 இழுவைப்படகுகளுடன் 22 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இது போதாது என்றே நினைக்கின்றேன். ஏனெனில் இவர்கள் கடலுக்கு வந்து குறிப்பாக எமது கரையை அண்டிய பகுதிகளுக்கு வந்து எமது கடல் வளங்களை மட்டுமல்லாது எமது கடற்றொழிலாளர்களது கடற்றொழில் உபகரணங்களையும் நாசமாக்கிச் செல்கின்ற நிலை காணப்படுகின்றது.

கடற்படையினர் இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ளும் இந்திய மீன்பிடியாளர்களைக் கட்டப்படுத்த மேலும் இறுக்கமான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என அமைச்சு சார்பில் வலியுறுத்திக் கூறுவதுடன் அதை கடற்படையினர் மேற்கொள்வார்கள் என்று நான் நம்புகின்றேன்.

கடற்படையினர் இன்றுமுதல் அத்துமீறி மீன்பிடிப்பவர்களைக் கட்டுப்படுத்துவார்கள் என்பதுடன் இவ்விடயம் இரு நாடுகளின் இராஜதந்திர நடவடிக்கைகளுடன் தொடர்புடையது என்பதால் இது தொடர்பில் ஜனாதிபதியும் எமது வெளிவிவகார அமைச்சினூடாக இந்தியத் தரப்பினருடன் பேச்சுகளை மேற்கொண்டு வருகின்றார் - என்றார்.

(அ-ஒ-20-26-27-125)

## நீதிகேட்டு...

இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு நல்லை ஆதீன முன்றிலில் இடம்பெற உள்ள கவனவீர்ப்புப் போராட்டத்துக்குத் தமிழர்களை அணிதிரளுமாறு ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் அமைதியான முறையில் வழிபாடுகளை முன்னெடுத்த மக்கள் மீது பொலிஸார் காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொண்டிருந்தனர். அத்துடன் 8 பேரைக் கைது செய்தும் உள்ளனர். அவர்கள் நாளை வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை உடனடியாக விடுவிக்குமாறு வலியுறுத்தியும், பொலிஸாரின் ஈனச் செயலைக் கண்டித்தும், வழிபாட்டு உரிமையை நிலைநாட்டும் வகையிலும் இன்று கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இன்றைய போராட்டத்துக்கு அரசியல் கட்சிகளும், பொது அமைப்புகளும் ஆதரவு தெரிவித்துள்ளன. (அ-ஒ-66-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு சுகாதாரசேவை

# ஆளணி வெற்றிடங்களை நிரப்ப சாதகமான பதில்

## வடக்கு மாகாண சுகாதாரசேவைகள் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவிப்பு

வடக்கு மாகாணத்தில் ஆரம்ப மருத்துவப் பிரிவுகளை சனி மற்றும் ஞாயிறு தினங்களில் இயக்கவும் வடமாகாண சுகாதாரசேவையில் நிலவும் ஆளணியை நிரப்பவும் சுகாதார அமைச்சின் செயலர் மருத்துவர் மஹிபால அதற்குச் சாதகமான பதிலை வழங்கியுள்ளதாக வடமாகாண சுகாதாரசேவைகள் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி 'உதயனுக்கு' தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் செயலர் மஹிபால மற்றும் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன ஆகியோர் வடக்கு மாகாணத்துக்கு நேற்று வருகை தந்தனர். வடக்கிலுள்ள சில மருத்துவமனைகளுக்கும் அவர்கள் சென்றனர். அத்துடன் வடக்கிலுள்ள மருத்துவ அதிகாரிகளுடன் கலந்துரையாடலும் நடத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி மேலும் தெரிவித்ததாவது:-

வட மாகாணத்தில் உள்ள ஆரம்ப மருத்துவ சுகாதார அலகுகளை மேம்படுத்தும் முகமாக நான்கு மருத்துவமனைகளைத் திறப்பதற்கான அனுமதியை வழங்கமுடியும் என சுகாதார அமைச்சின் செயலர் தெரிவித்தார்.

மேலும், ஆரம்ப சுகாதார பிரிவுகளில் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நோயாளர் கிளினிக்கை மேற்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான ஆளணியைப் பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர்களுக்கு வழங்குவதன் மூலம் சேவையை வினைத்திறனாக எதிர்காலத்தில் மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் நிலவுகின்ற பணி வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஆளணிக்குரிய அனுமதியை வழங்குவதாகவும் அமைச்சின் செயலர் இதன்போது தெரிவித்துள்ளார். மேலும் சில மருத்துவமனைகளில் மருத்துவர்களுக்கான ஆளணி அதிகமாகதேவைப்படுகின்றது. அவற்றை வழங்குவதாகவும் சுகாதார அமைச்சின் செயலர் உறுதியளித்துள்ளார்.

வட மாகாணத்தில் 140 குடும்பநல சேவை உத்தியோகத்தர்களே உள்ளனர். எதிர்காலத்தில் குடும்பநல சேவை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படும்போது வடக்கு மாகாணத்துக்கு அதிகளவானோரை நியமிக்க இணக்கம் காணப்பட்டது. தாதிய உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு சுகாதார அமைச்சின் செயலர் இணங்கினார் -என்றார். (ஓ-125)


**வேலையாட்கள் தேவை**

நல்லூர் அருகாமையில் உள்ள Food City ஒன்றுக்கு ஆண். பெண் வேலையாட்கள் தேவை.

**076 050 3863**



**வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள்**

DHL

சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் கொம்நெற் 321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.

**0777 554 528**


# மரண அறிவித்தல்

## குருமூர்த்தி கனகேஸ்வரி

சரவணை கிழக்கு, மயிலப்புலத்தைப் பிறப்பிடமாகவும், பொற்பதி வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட குருமூர்த்தி கனகேஸ்வரி அவர்கள் கடந்த (09.03.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குருமூர்த்தி (ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர் - வேலணை, மத்தியசபை உறுப்பினர் - வேலணை, ஓய்வூதிய சங்கச் செயலாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசய்யா - அமிர்தவல்லி அம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கமலம்மாவின் பெறாமகளும், காலஞ்சென்ற வைரமுத்து - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், மதிவதனி, குகதர்சன் (France) ஆகியோரின் அன்புத் தாயாரும், பஞ்சலிங்கம் (பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), சரண்யா (France) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கனகநாயகம், காலஞ்சென்ற பத்மநாதன், சிவலிங்கம், மகாலக்ஷ்மி, புஷ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரமேஸ்வரி, காலஞ்சென்ற மகேஸ்வரி, மற்றும் நாகேஸ்வரி, கமலாதேவி, லீலாவதி, பூபாலசிங்கம், காலஞ்சென்ற குகனேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஜனார்த்தன், சாகித்தியன், நிஷானி, ஆதவன், குருவர்ஷினி, குருதேவ், குருதிவ்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.03.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12.00 மணியவில் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொற்பதி வீதி,
கோண்டாவில்

தகவல்
குடும்பத்தினர்


# காணி விற்பனைக்கு உண்டு

**அச்சுவேலியில் 20 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- 16 அடிப்பாதையுடன் இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- அச்சுவேலியில் இருந்து சன்னதி கோயில் பிரதான வீதி அருகாமை
- அச்சுவேலி பஸ் தரிப்பு நிலையத்தில் இருந்து 1.5Km தூரத்தில்
- பிரதான வீதியிலிருந்து 200m தூரத்தில்
- தீத்தாம் பிள்ளையார் கோவிலில் இருந்து 100m தூரத்தில்
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி
- நன்னீர் ஊற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை ஐந்து இலட்சம் ரூபாய் மட்டும் (500 000/=)

பார்வையிடும் நேரம் காலை 8.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

**தொடர்பு: 076 739 0413, 074 027 5135**


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
10.05.1944



மறைவு
13.02.2024

## அமரர் குருசாமி குலசிங்கம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (12.03.2024) செவ்வாய்க் கிழமை காலை 7.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 14.03.2024 வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

செட்டியார் தரைவெளி,
பள்ளிக்குடா,
பூநகரி.

குடும்பத்தினர்
077 859 0456 / 077 475 0651


# வெற்றித்தேர்வு வெளியீட்டகம்

இல. 392, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்

தொ.பே : 077 538 8471, 077 312 6807

**வெற்றித்தேர்வின் தொடர் சாதனைப் பதிவுகளுடன்**



**வெற்றித்தேர்வு நாயகி - 2023**
**செல்வி J. வனிஸ்கா**
யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை
196 புள்ளிகள் - வடமாகாணத்தில் முதல்நிலை

**பாடசாலைகளுக்கான வெளியீடுகளாக......**

கல்வியாண்டு 2024 இற்கான தரம் 01 முதல் தரம் 05 வரையான அனைத்து வகுப்புகளிற்கும் வெற்றித்தேர்வுகள் வெளிவந்துவிட்டன.

தரம் - 05 - 20 வெற்றித்தேர்வுகளுடன் 15 நுண்ணறிவு வினாத்தாள்கள்
தரம் - 04 - 15 வெற்றித்தேர்வுகளுடன் 10 நுண்ணறிவு வினாத்தாள்கள்
தரம் - 03 - 15 வெற்றித்தேர்வுகளுடன் 10 நுண்ணறிவு வினாத்தாள்கள்

தரம் 01 , தரம் 02 மாணவர்களுக்கான வாராந்த மீட்டற் பயிற்சி வினாத்தாள்களாக அமைந்த தவணைக்கு 02 வீதம் வருடத்திற்கு 06 பொதிகள்......

ஒவ்வொரு பொதியிலும் 5 வெற்றித்தேர்வுகளும் ஒரு நுண்ணறிவு வினாத்தாளும் அடங்கியிருக்கும்.

பாடசாலைகள் வெற்றித்தேர்வு வெளியீடுகளை விசேட விலைக்கழிவுகளுடன் பெற்றுக்கொள்ள இன்றே தொடர்புகொள்ளுங்கள்.

"வெற்றித்தேர்வு வெற்றியாளர்களின் தெரிவு"




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.03. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.